இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு
************

# இலங்கையில் பண்டிட் விஸ்வ மோகன் பட் மற்றும் பண்டிட் சுபேன் சட்டர்ஜி ஆகியோரின் இசை நிகழ்ச்சி

இந்தியாவின் 71 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ள விசேட கலாசார நிகழ்வான "Divine Quartet"- இசை நிகழ்ச்சி 2020 ஜனவரி 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 06.30 மணியளவில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமி விருதுபெற்றவரும் பிரபல மோஹன் வீணை வித்துவானுமான பண்டிட் விஸ்வ மோகன் பட் அவர்களும் கிராமி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவரும் தபேலா வித்துவானுமான பண்டிட் சுபேன் சட்டர்ஜி அவர்களும் இந்த இசை நிகழ்வை வழங்கி சிறப்பிக்கவுள்ளனர். அவர்களுடன் அணிசேர் கலைஞர்களாக மேஸ்ட்ரோ ஸ்ரீ சலீல் பட் மற்றும் மேஸ்ட்ரோ ஸ்ரீ சம்பித் சட்டர்ஜி ஆகியோரும் "Divine Quartet" இசை நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

பண்டிட் விஸ்வ மோகன் பட் அவர்கள் பாரத ரத்னா பண்டிட் ரவி ஷங்கர் அவர்களின் முதன்மை சீடராக இருக்கும் அதேநேரம், சுவாமி ஹரிதாஸ் மற்றும் முஹாலய பேரரசர் அக்பர் (கி.பி 1502 - கி.பி 1605) அவையில் நவரத்தினங்களில் ஒன்றாக கருதப்படும் தன்சென் ஆகியோருடன் தமது பூர்வீகத்தினை ஒப்பிடும் மேல்மட்ட இசை சமூகத்தினையும் சேர்ந்தவர். மேற்குலகின் ஹவாய் கிற்றார் இசையினை சித்தார், சரோட் மற்றும் வீணை ஆகியவற்றுடன் இணைத்து அவர் உருவாக்கிய புதிய இசைக்கருவி இன்று உலகளவில் 'மோஹன் வீணை' என பிரபலமாகியுள்ளது.
தாளவாத்திய கலைஞரான பண்டித் சுபேன் சட்டர்ஜி அவர்கள் சர்வதேச புகழ்பெற்ற தபேலா கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2002 இல் அவரது இசைத்தொகுப்பான 'Artistry'க்காக கிராமி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.

இந்த இசை நிகழ்வுக்கான அனுமதி இலவசம் என்பதுடன் அழைப்பிதழ்கள் அவசியமாகும். சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தில் ( இந்திய கலாசார நிலையம்) குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அழைப்பிதழ்களை பெறமுடியும். அழைப்பிதழ்களைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டினை காண்பிக்கவேண்டும். மேலதிக தகவல்களுக்காக சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தை , 2684698 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது iccrcolombo2@gmail.com என்ற இ மெயிலை தொடர்பு கொள்ளவும்.

*****

Colombo
16 January, 2020